## சரியான நேரத்தில் பேச்சுவார்த்தை குழு அமைப்போம்!

# தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம்!

### புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி

புதுக்கோட்டை, பிப்11-

புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட பால்பண்ணை அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய பகுதிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்

நீ அரிசி கொண்டு வா நான் உன்னை கொண்டு வருகிறேன் இரண்டு பேரும் ஊதி ஊதி சாப்பிடலாம் என்று சொல்லி இன்று அமெரிக்கா உமியை கொடுத்துவிட்டு இந்தியாவின் வளத்தை ஊதி ஊதி சாப்பிடப்போவதுதான் அமெரிக்காவுக்கும் நம்முடைய பிரதமர் மோடிக்கும் ஏற்பட்டு இருக்கின்ற ஒப்பந்தம்.

இதனால் அமெரிக்காவுக்கு தான் நலனே தவிர இந்தியாவுக்கு நலன் எதுவும் கிடையாது. அமெரிக்காவின் மூன்று சதவீதமாக இருந்த இறக்குமதி வரியை 50 சதவீதமாக உயர்த்தினார்கள் அது இன்று 18 சதவீதமாக குறைத்து விட்டு நாங்கள் வரியை குறைத்து விட்டோம் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிற அரசுதான் இந்தியாவின் காவலாளி என்று சொல்லிக் கொள்கின்ற மோடி அரசினுடைய பணியாக உள்ளது.

இது இந்தியாவுக்கு தான் கெடுதல். இந்தியா அமெரிக்காவிடம் இருந்து தான் கச்சா எண்ணெயை வாங்க வேண்டும் என்று நிர்பந்திக்கிறது. ரஷ்யாவிடம் இருந்து வாங்குகின்ற கச்சா எண்ணை ஒரு பேரல் 50 டாலர் என்றால் அமெரிக்காவில் 55 டாலர். இதனால் யாருக்கு ஆதாயம் என்று சொன்னால் அதானிக்கும் அம்பானிக்கும் தான். மோடி எடுக்கின்ற எந்த ஒரு முடிவினுடைய இறுதியில் பார்த்தால் அது அதானி, அம்பானி சம்பந்தப்பட்டதாக அவர்கள் இருவருக்கும் மிகுந்த பொருளாதார வளத்தை பெருக்கி தருகின்ற செயலாக அமையும்.

த.வெ.க.வுக்கு 42 சதவீதம் வாக்கு வங்கி இருப்பதாக கூறுகின்றனர். அதை திருப்பி 24 இருந்தாலே பெரிய விஷயம். செங்கோட்டையனுக்கு அரசியல் புள்ளி விவரம் தெரியாது. அவருக்கு டூர் போட தெரியுமே தவிர மக்களின் மனதை அறிய தெரியாது.

தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி உடைந்து போகும் என்பது எடப்பாடி பழனிச்சாமியின் கனவு. அவரது எதிர்பார்ப்பு அதனால் அதைச் சொல்கிறார். எடப்பாடி எப்போதும் கனவு கண்டு கொண்டிருப்பவர் என்பது நாடறிந்த உண்மை.



அன்புமணி ராமதாஸுக்கு பொருளாதாரத்தை பற்றி என்ன தெரியும். அவர் மருத்துவத்தில் ஏதாவது சொல்லியிருந்தால் கூட பரவாயில்லை. அவர் பொருளாதார நிபுணரும் அல்ல மேதையும் அல்ல. அவர் சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதும் அல்ல. இந்தியாவிலேயே பொருளாதாரத்தில் சிறப்பான முன்னேற்றத்தை தந்துள்ள அரசு திராவிட மாடல் அரசு. இந்திய பொருளாதாரத்தை உயர்த்தி இருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு.

பிரதமர் மலேசியாவுக்கு சென்றால் தமிழை புகழ்ந்து பேசுவார். ஏனென்றால் மலேசியாவில் தமிழ்நாட்டில் இருந்து சென்று இருக்கின்ற இந்தியர்கள் தான் அதிகம். அதனால் அப்படி பேசுவார். ஆனால் ஒரிசாவுக்கு போனால் தமிழனை திருடன் என்பார். தமிழ் திருடனின் கையில் ஒரிசாவின் சாவி இருக்கிறது என்பார். பீகாருக்கு போனால் தமிழனை திருடன் என்பார். அங்கே எல்லாம் தமிழர்கள் திருடர்கள். ஆனால் வெளிநாட்டிற்கு சென்றால் அவர்களின் பார்வையில் தமிழர்கள் இணைப்பு பாலமாக விளங்க கூடியவர்கள்.

தமிழ்நாட்டில் கொண்டாடுவதைப் போல மலேசியாவில் தைப்பூசம் மிகச் சிறப்பாக கொண்டாடப்படக்கூடிய பண்டிகை. பினாங்கு மாநிலத்தில் இரண்டு நாட்கள் விடுமுறை அளிக்கக்கூடிய பண்டிகையாக அது கொண்டாடப்படுகிறது. அங்கு இருப்பவர்கள் இனம் பாராமல் மதம் பாராமல் சீனர்களாக இருந்தாலும் மலேசியாவை சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்தியர்களாக இருந்தாலும் எல்லோரும் தமிழ் கடவுள் முருகனை ஏற்றுக்கொண்டு அங்கே அந்த விழாவை நடத்துகிறார்கள். இன்று மலேசியாவில் இருக்கின்ற மிகப்பெரிய தமிழர் திருவிழா என்பது தைப்பூசத் திருவிழா சிங்கப்பூரிலும் இது நடக்கிறது. கோலாலம்பூர் பினாங்கு போன்ற பகுதிகளிலும் நடக்கிறது. இதையெல்லாம் பார்த்து தான் மோடி பேசுகிறாரே தவிர. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய முருகனுக்கு தமிழ்நாடு மக்களுக்குத் தெரியும் அவர்கள் தமிழ் பக்தர்கள் தமிழ் முருகனை வணங்குபவர்கள். திராவிட மாடல் ஆட்சியின் நிலைமை புரியும். தங்களுக்கு பாதுகாப்பு திராவிட மாடல் ஆட்சி என்பதை உணர்ந்தவர்கள் தான் தமிழ்நாட்டு முருக பக்தர்கள்.

முருகனை முன் நிறுத்தினாலும், ராமனை முன்னிறுத்தினாலும் எங்களை பொறுத்தவரை நாங்கள் அடுத்தவருடைய மதக் கலாச்சாரத்தில் தலையிடுவது கிடையாது. அவர்கள் இஷ்ட தெய்வங்களை வழிபட வசதிகளை செய்து கொடுக்கும் அரசுதான் தமிழ்நாடு அரசு. 4000த்திற்கும் மேற்பட்ட குட முழுக்குகளை செய்துள்ள ஒரே அரசு திராவிட மாடல் அரசு. மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற அரசு திராவிட மாடல் அரசு என்பதை புரிந்து கொள்ள முடியும்.

காங்கிரஸ் தி.மு.க. கூட்டணி குறித்து பேச எப்போது குழு அமைக்க எப்போது சரியான நேரம் வருகிறதோ அப்போது குழு அமைப்போமே தவிர இது மிகப்பெரிய கூட்டணி. எல்லோருடன் பேசுவதற்கு சுருக்கமான காலத்தில் அந்த கூட்டணியை பேசி முடிக்க வேண்டும். அதற்கு ஏற்றார் போல் எங்கள் தலைவர் வியூகம் வகுத்து கூட்டணியை முடிவு செய்வார். அதில் எந்த வித பிசுபிசுப்பும் வராது. யாரும் கவலைப்பட வேண்டாம்.

ஆட்சியில் பங்கு கேட்க எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. அதைக் கொடுக்கின்ற இடத்தில் எங்கள் தலைவர் இருக்கின்றார். அவரை பொறுத்தவரை திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும். அது கூட்டணி கட்சி ஆதரவோடு தொடர வேண்டும் என்பதுதான் எங்கள் தலைவரின் விருப்பம்.

எடப்பாடி பழனிச்சாமி வாக்குறுதி என்பது பொய்பாடி வாக்குறுதிகள். எல்லாமே பொய் என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு தெரியும். அவர் ஆட்சியில் இருக்கும் போது இதையெல்லாம் செய்திருக்கலாம் செய்யவில்லை. நாங்கள் சொன்னதையும் செய்ய முடியாது என்ற சொன்ன வாய்தான் எடப்பாடி பழனிச்சாமி. அவரை மக்கள் நம்ப மாட்டார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சட்டம் ஒழுங்கு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் சிறப்பாக இருக்கிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அதனால் யாரும் அச்சப்பட தேவையில்லை. எங்கள் கூட்டணியில் எந்த குழப்பமும் வராது. திராவிட மாடல் ஆட்சி தொடரும்.

நாங்கள் கூட்டணியில் உள்ளவர்களை சம இடத்தில் வைத்து சமமாகத்தான் வைத்துள்ளோம். யாரையும் ஆண்டான் அடிமையை போல் நடத்துகின்ற பழக்கம் தி.மு.க.வுக்கு எந்த காலத்திலும் கிடையாது. எல்லோருக்கும் ஒரே மாதிரியான மதிப்பை தருகின்ற ஒரே இயக்கம் தி.மு.க. டி.என்.பி.எஸ்.சி. தேர்வு பொருத்தவரை சில இடங்களில் சில குளறுபடிகள் நடந்துள்ளது. டி.என்.பி.எஸ்.சி. தப்பாக நடத்த வேண்டும் என்ற நிலை எங்களுக்கு ஏன் இருக்கிறது. அது மாதிரியான தேவை கிடையாது. நாங்கள் நேர்மையாக தான் நடத்துவோம். எல்லோருக்கும் பொதுவாக தான் இருக்கும். அங்கு திறமையானவர்கள் தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அங்கு பரிந்துரைக்கு இடம் கிடையாது என்று அமைச்சர் தெரிவித்தார்.

---

## கழக சட்டதிட்ட விதி : 18, 19 மற்றும் 31-ன்படி

# தலைமைக் கழக நிர்வாகிகள் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு

**தி.மு.க. செய்தித் தொடர்பு துணைத் தலைவராக திரு.ஏ.சுப்புரத்தினம்**, முன்னாள் எம்.எல்.ஏ., (எச்-16, ஆர்.எம்.காலனி, திண்டுக்கல்) அவர்களும்,

**தி.மு.க. வர்த்தகர் அணி துணைச் செயலாளர்களாக திரு. பி.டி.செல்வகுமார்** (மணியா நகர், கொட்டாரம், கன்னியாகுமரி மாவட்டம்) **திரு. ஜெ. பாலகங்காதரன்.** முன்னாள் எம்.எல்.ஏ., (1/98, ஆலமரத்துப்பட்டி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்) ஆகியோரும்;

தி.மு.க. மாணவர் அணி துணைச் செயலாளராக **திரு. ஆர்.சுரேஷ்குமார்** (திருச்செங்கோடு, நாமக்கல்) அவர்களும்;

தி.மு.க. சுற்றுச்சூழல் அணி துணைச்செயலாளராக **திரு. சங்கர் தருமன்** (புங்கம்பட்டி, சாப்பாத்தி, கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்களும்;

தி.மு.க. சட்டத்துறை துணைச் செயலாளராக **திரு. ஜெயக்குமார்** ( மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி, மதுரை மாவட்டம்) அவர்களும்;

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைச் செயலாளராக **திரு.என். சிவக்குமார்** (13/5, விவேகானந்தர் 2வது தெரு, மதிச்சியம், மதுரை 625 020.) அவர்களும்;

**தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமை பிரிவு மாநில துணைச் செயலாளராக திரு.எஸ். ஷேக் இஸ்மாயில்** (73/4, ஆதம் தெரு, அன்சாரி நகர் 7வது தெரு, மகபூப் பாளையம், மதுரை 625 016.) **அவர்களும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.**

ஏற்கனவே நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 10.02.2026. தி.மு.க.

---

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில்

# திருப்பத்தூர் மாவட்டத்தில் 9 இடங்களில் ஆர்ப்பாட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பத்தூர் , பிப்.11-

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க. தேவராஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளதற்கு எதிராகவும் 100 நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பாஜக அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அதிமுகவையும் கண்டித்து தமிழ்நாட்டின் அனைத்து மாநகரங்களிலும், கழக ஒன்றியம், நகரம், பேரூர் அளவிலும் நாளை (12.02.2026-வியாழக்கிழமை) மாலை 4:00 மணி அளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்ற மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தலைவர்களின் அறிவிப்பின்படி நாளை (12.02. 2026-வியாழக்கிழமை) மாலை 4:00 மணி அளவில் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் கழகங்கள் சார்பில் கீழ்க்கண்ட இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.



இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் நகர, ஒன்றிய, பேரூர்க் கழகங்கள், ஆர்ப்பாட்டம் ஏற்பாட்டாளர்கள் மற்றும் நடைபெறும் இடங்கள் வருமாறு:

வாணியம்பாடி கிழக்கு, வாணியம்பாடி மேற்கு, உதயேந்திரம் பேரூர்- வி.எஸ். சாரதிகுமார், கயாஸ் அகமத் ,ஆ.செல்வராஜ்- வாணியம்பாடி பேருந்து நிலையம் அருகில்

ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்தியம், ஆலங்காயம் மேற்கு- ஆலங்காயம் பேரூர், திருப்பத்தூர் கிழக்கு, எஸ்.தாமோதிரன், வி.ஜி.அன்பு, வி.எஸ்.ஞானவேலன், ம.ஸ்ரீதர், கே.ஆர். திருப்பதி - வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் ஆலாங்காயம், நாட்றம்பள்ளி மேற்கு, நாட்றம்பள்ளி கிழக்கு, நாட்றம்பள்ளி- பேரூர் என்.கே. ஆர்.சூரியகுமார்,-ஆர்.ஆர். கிருஷ்ணமூர்த்தி, எஸ்.உமாசந்திரன்- நாட்றம்பள்ளி பேருந்து நிலையம்,

ஆம்பூர் மேற்கு, ஆம்பூர் கிழக்கு,மாதனூர் மேற்கு, அ.செ.வில்வநாதன் MLA எம்.ஆர்.ஆறுமுகம், எஸ். எம்.ஷபீர்அகமத் - ஆம்பூர் - கிராம சாவடி எதிரில்

குடியாத்தம் வடகிழக்கு, குடியாத்தம் வடகிழக்கு, மாதனூர் கிழக்கு, அணைக்கட்டு தெற்கு, ஜோலார்பேட்டை நகரம்- ப.ச.சுரேஷ்குமார்,

க.இராமமூர்த்தி,த. முரளி,ம.அன்பழகன் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் மாதனூர்

ஜோலார்பேட்டை கிழக்கு, ஜோலார்பேட்டை மேற்கு, ம.அன்பழகன் க.உமாகன்ரங்கம், கே.சதீஷ்குமார், எஸ்.கோடியூர்

ஜோலார்பேட்டை மத்தியம், கந்திலி தெற்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர்நகரம் டி.அசோக்குமார், கவிதா தண்டபாணி, ஏ.சி. சுரேஷ்குமார், எஸ்.ராஜேந்திரன் பாச்சல் பேருந்து நிறுத்தம் அருகில்

திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு-அ. நல்ல தம்பி MLA, எம்.இராஜேந்திரன்-தாலுக்கா அலுவலகம் எதிரில் கந்திலி மத்தியம், கந்திலி மேற்கு, கந்திலி கிழக்கு-கே.ஏ.குணசேகரன், கே.முருகேசன்,அ.மோகன்ராஜ் -காக்கங்கரை

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் அந்தந்தப் பகுதிக்குட்பட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக அணிகளின் நிர்வாகிகள், நகர மன்ற, ஒன்றிய குழு, பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு கழக, கிளைக்கழக நிர்வாகிகள், BLA2, BDA, BLC நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஐ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!**

மேற்கண்டவாறு தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர்.தேவராஜி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

---

## திருவிடந்தையில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தலைமையில் மண்டல மாநாடு !

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து 9000பேர் பங்கேற்பு!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ.அறிக்கை!

செஞ்சி, பிப்.11-

திருவிடந்தையில் பிப்ரவரி 11 அன்று கழகத் தலைவர்,முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி மண்டல மாநாட்டில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து 150 வாகனங்களில் 9000பேர் பங்கேற்க உள்ளதாக விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தனது அறிக்கையில் கூறுகையில்:

சென்னை, விழுப்புரம் , மண்டலம்சார்பில்என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி மாபெரும் மண்டல மாநாடு காஞ்சிபுரம் மாவட்டம் திருவிடந்தையில் இன்று (பிப். 11ஆம் தேதி) மாலை நடைபெறுகிறது இந்த மாநாட்டில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரையாற்றுகிறார்.

இந்த மாநாட்டில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதியில் உள்ளவாக்குச்சாவடி முகவர்கள்,வாக்குசாவடி டிஜிட்டல் முகவர்கள், BLA2, BLC,BDA,BYO ஆகிய வாக்குசாவடி குழுவினர் என சுமார் 150 வாகனங்களில் 9000 பேர் பங்கேற்பது எனவும்,



ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளதற்கு எதிராகவும் 100 நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து தமிழ்நாட்டு மக்களைவஞ்சித்துதமிழ்நாட்டு வளர்ச்சியை தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அதிமுகவை கண்டித்து நாளை (பிப்.12ஆம் தேதி-வியாழக்கிழமை) காலை 10:30 மணியளவில் மதச்சார்பற்ற முற்போர்க்கு கூட்டணி சார்பில்கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

விழுப்புரம் வடக்கு மாவட்டம்செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகியதொகுதிகளில்உள்ள ஒன்றிய,நகர பேரூர் அளவில் நடைபெறும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கிளை கழக செயலாளர்கள்,கழக நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும்அந்தந்த பகுதிகளில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திரலாக கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பாஜகஅரசையும் ஒத்து ஊதும் அதிமுகவை கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டும்.

பிப்பரவரி 13 ஆம் தேதி விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி சார்பில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் மாலை 5.00 மணிக்கு நடைபெறும் தமிழ்நாடு தலைகுனியாது மற்றும்கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில்முன்னாள் மத்திய அமைச்சரும், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார். இதேபோல்பிப்ரவரி 16ஆம் தேதி மயிலம் சட்டமன்ற தொகுதி சார்பில் திண்டிவனம் செஞ்சி சாலையில் உள்ள தீவனூரில் மாலை 5 மணிக்கு நடைபெறும் தமிழ்நாடு தலை குனியாது மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில்நாடாளுமன்ற உறுப்பினர்,கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் ஜெகத்ரட்சகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.செஞ்சி மயிலம் ஆகிய சட்டமன்ற தொகுதி சார்பில் நடைபெறும் தமிழ்நாடு தலைகுனியாது மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் தி.மு.க. நிர்வாகிகள் திரளாக பங்கேற்று கூட்டத்தைசிறப்பிக்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. னது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நாளை நடைபெறும்

# கண்டன ஆர்ப்பாட்டத்தில் சமத்துவ மக்கள் கழகத்தினர் பங்கேற்பு!

### எர்ணாவூர் நாராயணன் அறிக்கை!

சென்னை, பிப்.11-

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டைபுறக்கணித்த ஒன்றிய பா.ஜ.க.வையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க. வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சமத்துவ மக்கள் கழகம் பங்கேற்கும் என எர்ணாவூர் நாராயணன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக இருக்கிறது. மத்திய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி ரூ.3458 கோடி, நூறு நாள் வேலை திட்ட நிதி ரூ.2000 கோடி, குடிநீர் இணைப்பு திட்ட நிதி ரூ3,112 கோடி உள்ளிட்ட எந்த நிதியையும் விடுவிக்காமலும் வளர்ச்சி திட்டத்திற்கு ஒரு பைசா கூட ஒதுக்காமலும், தமிழ்நாட்டு மக்களைப் புறக்கணித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

தமிழ்நாட்டிற்கான நிதியும் இல்லை வளர்ச்சித் திட்டமும் இல்லை என மத்திய அரசு கைவிரித்த போதும் அவர்களது காலில் விழுந்து ஆதரித்துள்ளது அடிமை அ.தி.மு.க.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளதற்கு எதிராகவும், 100 நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியை தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு துணையாக நிற்கும் அ.தி.மு.க.வையும் கண்டித்து நாளை (12.2.2026 -வியாழக்கிழமை) தமிழக முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சமத்துவ மக்கள் கழகம் நிர்வாகிகள் ,தொண்டர்கள் பெருந் திரளாக அந்தந்த பகுதியில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொண்டு தங்களது எழுச்சியை வெளிப்படுத்தி தமிழ்நாடு போராடும் ,தமிழ்நாடு வெல்லும் என்ற கொள்கையை முழங்கி தங்களது எழுச்சியை வெளிப்படுத்துமாறு சமத்துவ மக்கள் கழகம் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.



இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## வேலூர் தெற்கு மாவட்டம்

## பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல்

# வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு

கடந்த 4.11.2025 அன்று கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் வேலூர் மாவட்டம், வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு என இரண்டு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டதில், வேலூர் தெற்கு மாவட்டத்தில், மாவட்டப் பொருளாளர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

வேலூர் தெற்கு மாவட்டம், பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 17 (செவ்வாய் கிழமை) அன்று

ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.””

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் வேலூர் தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/ பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**“அண்ணா அறிவாலயம்”** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 10.02.2026. தி.மு.க.

---

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு

தஞ்சை மத்திய மாவட்டம், பூதலூர் வடக்கு ஒன்றியம், திருக்காட்டுப்பள்ளி பேரூரைச் சேர்ந்த த.திருஞான சம்பந்தம் – ஒரத்தநாடு தெற்கு ஒன்றியம், ஆம்பலாபட்டு வடக்கு கிராமத்தைச் சேர்ந்த சி.நேதாஜி – திருவையாறு வடக்கு ஒன்றியம், திருவையாறு பேரூரைச் சேர்ந்த மு.திபேஷ்பிரபா ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 10.02.2026. தி.மு.க.